# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 245/மா/2025**

**நாள்: 07.05.2026**

S. அன்பழகன்
துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் --- முறையீட்டு மனுதாரர்

(1) ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி
(2) உரிமையாளர்
EMM + ESS மருத்துவமனை,
காஞ்சிபுரம் --- எதிர்மனுதாரர்கள்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் & வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண் 155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன் என்பவரின் 08.07.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 10.07.2025 அன்று பெறப்பட்டு 245/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் & வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண் 155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. அன்பழகன் என்பவர் தனது 08.07.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

> "தமிழகத்தில் பழைமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்கிற விதியை மீறி காஞ்சிபுரத்தில் ஆஸ்பிட்டல் ரோட்டில் மாநகராட்சி அலுவலகம் அருகில் வைகுண்டபெருமாள் கோவிலுக்கு $^1/_2$ கிலோ மீட்டர் தூரத்திலும், மதங்கீஸ்வரர் கோவிலுக்கு $^1/_2$ கிலோ மீட்டர் தூரத்திலும் சுமார் 20 மீட்டர் உயரத்திற்கு மேல் 4 மாடி கட்டிடம் அதுவும் 20,000 சதுரஅடி பரப்பளவில் EMM + ESS மருத்துவமனை விதியை மீறி சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ளதை ஆதாரத்துடன் விளக்கி கட்டிடத்தை ஆய்வு செய்து 9 மீட்டர் உயரத்திற்கு மேல் உள்ள கட்டிடத்தை இடிக்க வேண்டி நான் கடந்த 23.4.2025இல் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு புகார் அனுப்பி அதன் நகலை நகராட்சி நிர்வாக இயக்குனர், மண்டல இயக்குனருக்கும் அனுப்பினேன். (மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகல் இத்துடன் இணைக்கப்படுகிறது)

நான் அனுப்பிய புகாரை மாநகராட்சி ஆணையர் 28.04.2025இல் பெற்றுக் கொண்டதாக ஒப்புகை சான்று வந்துள்ளது. அதுபோல நிர்வாக இயக்குனர் மண்டல இயக்குனர் இருவரும் பெற்றுக் கொண்டதாக ஒப்புகை சான்று வந்துள்ளது.

நான் மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரிலேயே மிக தெளிவாக தமிழகத்தில் பழைமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக்கூடாது என்ற விதியை மீறியும் 30.01.1997இல் இது சம்பந்தமாக அரசாணை வெளியிட்டதை தெரிந்தும் அதுவும் மாநகராட்சி அலுவலகம் அருகில் பல்லவர் காலத்து பழைமை வாய்ந்த கோவில்களான மதங்கீஸ்வரர், வைகுண்ட பெருமாள் கோவிலிலிருந்து $^1/_2$ கிலோ மீட்டர் தூரத்தில் சுமார் 20 மீட்டர் உயரத்திற்கு மேல் EMM + ESS மருத்துவமனை சட்ட விரோதமாக கட்டி உள்ளதை குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் நான் புகாரிலேயே புதிதாக கட்டிடம் கட்டும் இடங்களை எவ்வாறு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அனுப்பியுள்ள சுற்றறிக்கையை கடைபிடித்திருந்தால் தற்போது விதிமீறி கட்டியுள்ள EMM + ESS மருத்துவமனையை ஆரம்பத்திலேயே கட்டாமல் தடுத்து நிறுத்தி இருக்கலாம் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் அரசாணை எண் 139 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 10.05.2002 காஞ்சிபுரம் முழுமைத் திட்டத்தின்படி PROTECTED MONUMENTS UNDER THE ANCIENT MONUMENTS AND ARCHAEOLOGICAL SITES AND REMAINS ACT, 1958இல் அறிவிப்பு செய்யப்பட்டபடி மதங்கீஸ்வரர், வைகுண்ட பெருமாள்கோவில் ஆகிய கோவில்களுக்கு 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் கட்டிட உயர வரம்பு 9 மீட்டர் ஆகும். ஆனால் $^1/_2$ கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 20 மீட்டர் உயரத்திற்கு மேல் விதியை மீறி EMM + ESS மருத்துவமனை கட்டி இருப்பது மிகப் பெரிய அளவில் ஊழல் நடந்துள்ளதோ என்ற சந்தேகம் எழுகின்றது. இதனால் தான் மாநகராட்சி அலுவலகம் அருகிலேயே இதுபோல் விதிமீறி மருத்துவமனை கட்டப்பட்டுள்ளதை கண்டு கொள்ளவில்லையோ என்று நினைக்க தோன்றுவதாக எனது புகாரிலேயே குறிப்பிட்டிருந்தேன்.

மேலும், திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் கோவிலை சுற்றி இதுபோல் விதி மீறல் கட்டிடங்கள் தொடர்பான வழக்கில் விதியை மீறி கட்டிடம் கட்டும் வரை நடவடிக்கை எடுக்காமல் இருந்த திருச்சி மாநகராட்சி ஆணையரை நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதையும் ஆணையருக்கு புகாரிலேயே சுட்டி காட்டி இருந்தேன். மேலும் திருச்சி அடுக்குமாடி குடியிருப்பு வழக்கில் விதிமீறி கட்டிடம் கட்டும் வரை நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்த திருச்சி மாநகராட்சி ஆணையர் உட்பட அனைத்து அதிகாரிகள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததையும் என் புகாரிலேயே ஆணையருக்கு சுட்டி காட்டி இருந்தேன்.

ஏற்கனவே காஞ்சிபுரத்தில் விதிமீறி செயல்பட்ட ஸ்ரீராம்ஸ் ரெசிடென்ஸி, காஞ்சி காமாட்சி ரெசிடென்சி மீது புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரிடம் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரத்தை கூறியதோடு கூடிய விரைவில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வேன் என்பதையும் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே தெளிவாக குறிப்பிட்டுள்ளேன். மேலும் தலைமை செயலாளரின் சுற்றறிக்கையின்படி 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தினை எனக்கு தெரிவிக்குமாறு ஆணையருக்கு அளித்த புகாரிலேயே குறிப்பிட்டிருந்தேன். நான் ஆணையருக்கு அளித்த புகாரில்

அனைத்து அம்சங்களையும் விளக்கி தகுந்த ஆதாரங்களுடன் புகார் கொடுத்தும் இதுவரை ஆணையர் என் புகார் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதை பார்க்கும் போது விதிமீறிய EMM + ESS மருத்துவமனை நிர்வாகியிடம் லஞ்சம் பெற்றுள்ளார் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாகிறது.

மேலும் சமீபத்தில் மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதி அரசர் ADGP கைது வழக்கின் போது சட்டத்தை மீறினால் என்ன நடக்கும் என்பதை அனைத்து அரசு அதிகாரிகளும் உணர வேண்டும் என்பதை குறிப்பிட்டும் ஆணையர் சட்டத்தை மீறி நடப்பதை பார்க்கும் போது மாண்புமிகு உயர்நீதிமன்றத்திற்கே சவால் விடுவது போல் உள்ளது.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அனுமதியில்லா கட்டுமானங்கள் மீது எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவை இணைத்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் அனைத்து மாநகராட்சி ஆணையர்களுக்கும் Roc No.3555/2025/TP3 நாள் 15.5.2025 இல் கடிதம் அனுப்பியும் மாண்புமிகு உச்சநீதிமன்றத்திற்கே சவால் விடும் விதமாக இதுவரை விதி மீறிய EMM + ESS மருத்துவமனை மீது ஆணையர் நடவடிக்கை எடுக்காததது அதிர்ச்சி அளிக்கின்றது. (இத்துடன் Roc No.3555/2025/TP3 நாள் 15.05.2025 கடிதம் இணைக்கப்படுகிறது)

எனவே மாண்புமிகு, மரியாதைக்குரிய தாங்கள் உச்சநீதிமன்ற உத்தரவுப்படி விதிமீறிய EMM + ESS மருத்துவமனை மீது நடவடிக்கை எடுத்து விதி மீறிய கட்டிடத்திற்கு உடந்தையாக இருந்த மாநகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து சத்தியத்தின் வழியில் சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க்கணி என்ற குறளுக்கு ஏற்ப மனு நீதிச் சோழன் போல் நீதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 16.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் 5266/2025/எப்1, நாள் 30.07.2025 மற்றும் 18.03.2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளார். அதில்–

<u>30.07.2025 நாளிட்ட அறிக்கை</u>

''காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.12, நகரளவு எண்.852, 853 பழைய கதவு எண்.33சி, 33சி1 மதங்கீஸ்வரர் கோவில் தெருவில் நகராட்சி அலுவலக கட்டிட அனுமதி எண் 008/BL/2022/00346 நாள் 30.06.2022–ன்படி, ஸ்டில்ட் முதல் மற்றும் இரண்டாம் தளம் வணிக கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டிட உரிமையாளர் அனுமதிக்கு மாறுதலாக ஸ்டில்ட் தளத்தை மருத்துவமனையாகவும், கூடுதலாக மூன்றாம் தளமும், மருத்துவமனை கட்டிடமாக கட்டியுள்ளார்.

மேலும், மேற்கண்ட கட்டிடத்தின் மீது மேல்நடவடிக்கை தொடர தொடர்ச்சியாக நகரமைப்பு பிரிவில் அலுவலர் பணியிடம் காலியாக இருந்த நிலையில், தொடர் நடவடிக்கை எடுக்க இயலவில்லை. தற்போது தொடர் நடவடிக்கையாக மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135/1–ன்கீழ் 12.06.2025–ல் அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி கட்டிடத்திற்கு இம்மாநகராட்சி மூலம் வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதி நகல், வரைபடம் மற்றும் அறிவிப்பு நகல்கள் ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**18.03.2026 நாளிட்ட அறிக்கை**

“காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.12, நகரளவு எண்.852, 853 பழைய கதவு எண்.33C, 33C1 மதங்கீஸ்வரர் கோவில் தெருவில் நகராட்சி அலுவலக கட்டிட அனுமதி எண் 008/BL/2022/00346 நாள் 30.06.2022–ன்படி, ஸ்டில்ட் முதல் மற்றும் இரண்டாம் தளம் மருத்துவமனை கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டிட உரிமையாளர் அனுமதிக்கு மாறுதலாக ஸ்டில்ட் தளத்தை மருத்துவமனையாகவும், கூடுதலாக மூன்றாம் தளமும் மருத்துவமனை கட்டிடமாக தொல்பொருள் துறை உயர கட்டுப்பாட்டு விதிகளை மீறி கூடுதலான உயரத்தில் கட்டியுள்ளார்.

தற்போது, மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135/1–ன்கீழ் 12.06.2025 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டது. அறிவிப்பில் கட்டிட பணியை நிறுத்திவிடுவதோடு அனுமதி வழங்கப்பட்ட வரைப்படத்திற்கு மாறுதலாக கட்டப்பட்ட கட்டிடத்தை பதினைந்து (15) தினங்களுக்குள் மேற்படி சட்ட பிரிவு 135(2)ன் கீழ் கட்டிட அனுமதி கோரி திருத்திய வரைப்படம் இணையதளம் மூலம் விண்ணப்பிக்க தெரிவிக்கப்பட்டது. தவறும்பட்சத்தில் 135(6)–ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் 15 தினங்களுக்கு மேல் ஆயினும் இணையதளம் மூலம் விண்ணப்பிக்காத காரணத்தால் 04.02.2026 அன்று இறுதி அறிவிப்பு சட்ட பிரிவு 135(6)–ன்கீழ் வழங்கப்பட்டுள்ளது. இறுதி அறிவிப்பில் 15 தினங்களுக்குள் இதுவரையில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த தெரிவிக்கப்பட்டது. தவறும்பட்சத்தில் சட்டப்பிரிவு 180–ன்கீழ் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு தாக்கல் செய்வதாக தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் இதுநாள் வரை இணையதளம் மூலம் விண்ணப்பிக்கவோ கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தவில்லை. எனவே இவ்வலுவலக குற்றபத்திரிக்கை எண் P.R.No.3/Zone1/2026, நாள் 25.02.2026–ன்படி கட்டிட உரிமையாளர் மீது காஞ்சிபுரம் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ல் பிரிவு 135(1) (2) (6) R/W 180–ன்கீழ் குற்றச்சாட்டு பதிவு செய்து குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள குற்றப்பத்திரிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு இம்மாநகராட்சி மூலம் வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதி நகல், வரைபடம், அறிவிப்பு நகல்கள் மற்றும் குற்றப்பத்திரிக்கை நகல் ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.”

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.03.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இந்நிலையில், மனுதாரர் 24.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் தன்னுடைய எழுத்துபூர்வமான வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்::–

“தமிழகத்தில் பழைமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்கிற விதியை மீறி காஞ்சிபுரத்தில் ஆஸ்பிட்டல் ரோட்டில் மாநகராட்சி அலுவலகம் அருகில் வைகுண்டபெருமாள் கோவிலுக்கு $^1/_2$ கிலோ மீட்டர் தூரத்திலும், மதங்கீஸ்வரர் கோவிலுக்கு $^1/_2$ கிலோ மீட்டர் தூரத்திலும் சுமார் 20 மீட்டர் உயரத்திற்கு மேல் 4 மாடி கட்டிடம் அதுவும் 20000 சதுரஅடி பரப்பளவில் EMM + ESS மருத்துவமனை விதியை மீறி கட்டியுள்ளதோடு, மேலும் அரசாணை எண் 139 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 10.05.2002 காஞ்சிபுரம் முழுமைத் திட்டத்தின்படி PROTECTED MONUMENTS UNDER THE ANCIENT MONUMENTS AND ARCHAEOLOGICAL SITES AND

REMAINS ACT, 1958இல் அறிவிப்பு செய்யப்பட்டபடி மதங்கீஸ்வரர், வைகுண்ட பெருமாள் ஆகிய கோவில்களுக்கு 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் கட்டிட உயர வரம்பு 9 மீட்டர் உயரம் தான் இருக்க வேண்டும் என்ற விதியை மீறி EMM + ESS மருத்துவமனை கட்டி இருப்பது மிக பெரிய அளவில் மாநகராட்சி அதிகாரிகள் ஊழல் செய்துள்ளார்கள் என்பது நிரூபணமாகிறது.

எனவே, விதிமீறிய EMM + ESS மருத்துவமனை கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காத காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து விதிமீறி கட்டப்பட்டுள்ள EMM + ESS மருத்துவமனை கட்டிடத்தை உச்சநீதிமன்ற உத்தரவு எண் **12199–12200** நாள் **30.04.2025** உத்தரவின் அடிப்படையில் இடித்து அகற்றுமாறு பொது நலன் கருதி கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே காஞ்சிபுரத்தில் விதிமீறிய ஸ்ரீராம் ரெசிடென்ஸி கட்டிடத்தின் மீது தங்களால் நடவடிக்கை எடுக்க உத்ததிரவிட்ட 83/மா/2025இன் வழக்கின் நிர்வாகி தான் ஆணையரை சரிகட்டி விட்டதாகவும், நான் உயர்நீதிமன்றத்தில் கட்டிடத்தை இடிக்க வழக்கு போடக்கூடாது என்றும், மீறி வழக்கு போட்டால் கொலை செய்து விடுவதாக மிரட்டியது தொடர்பாக D.I.G. SP ஆகியோரிடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மாண்புமிகு நீதி பேரரசர் மணிக்குமார் அவர்களின் நேரடி கவனத்திற்கு என் பிரச்சனையை கொண்டு சென்றதால் என் புகார் மீது மின்னல் வேகத்தில் **10941/22/36/2025** என எண்ணிட்டு வழக்கு பதிவு செய்து விசாரணை வளையத்திற்குள் D.I.G., SP மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் இணைத்து வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது.

ஏற்கனவே காஞ்சிபுரத்தில் விதிமீறிய காஞ்சி காமாட்சி ரெசிடென்சி மீது வணக்கத்திற்குரிய தாங்கள் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்ட 165/மா/2025–ன் உத்தரவை காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் அமல்படுத்தாமல் அரசியல் சட்டம் எனக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமையையும் எனது பொது நல நோக்கத்தையும் சீர்குலைத்து நான் வாழ்நாள் முழுவதும் இனி பொது நலனில் ஒரு போதும் ஈடுபடக்கூடாது என்று தடுக்கும் நோக்கில் செயல்படும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து நான் பொது நலனில் தொடர்ந்து ஈடுபட எனக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் வகையில் இழப்பீடு பெற்றுத் தருமாறு மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மாண்புமிகு நீதி பேரரசர் மணிக்குமார் அவர்களிடம் நேரடியாக புகார் அளித்த காரணத்தால் என் புகார் டைரி எண் **1356/CR/2026** என பதியப்பட்டு கூடிய விரைவில் வழக்கு பதிவு செய்யப்படும் என்பதை தங்களுக்கு தெரிவித்து கொள்கிறேன்.

எனவே இத்தகைய சூழ்நிலையில் தாங்கள் **2** வழக்குகளில் உத்தரவு பிறப்பித்தும் நடவடிக்கை எடுக்காத காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் இந்த புகாருக்கு நடவடிக்கை எடுப்பார் என்பது நம்ப முடியாத செயலாகும். எனவே மதிப்புமிக்க தாங்கள் காஞ்சிபுரத்தில் விதிமீறி கட்டியுள்ள EMM + ESS மருத்துவமனை கட்டிடத்தை இட நேராய்வு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் தாழ்மையுடன் கீழ்ப்படிந்து கேட்டுக் கொள்கிறேன்.''

6. மேலும், மனுதாரர் **24.03.2026** அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''தமிழகத்தில் பழைமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் **09** மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்கிற விதியை மீறி காஞ்சிபுரத்தில், வைகுண்டபெருமாள் கோவிலுக்கு **1/2** கிலோ மீட்டர் தூரத்திலும், மதங்கீஸ்வரர் கோவிலுக்கு **1/2** கிலோ மீட்டர் தூரத்திலும் சுமார் **20** மீட்டர்

உயரத்திற்கு மேல் 4 மாடி கட்டிடம், 20,000 சதுரடி பரப்பளவில் ஆஸ்பிட்டல் ரோட்டில் EMM + ESS மருத்துவமனை விதியை மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை ஆய்வு செய்து 9 மீட்டர் உயரத்திற்கு மேல் உள்ள கட்டிடத்தை இடிக்க 23.04.2025 நாளிட்ட புகார் மனு காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கும், மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மேலும், அரசாணை எண்.139 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 10.05.2002ல் காஞ்சிபுரம் முழுமைத்திட்டத்தின்படி The Ancient Monuments and Archaeological Sites and Remains Act, 1958இல் அறிவிப்பில் தெரிவித்துள்ளபடி, மதங்கீஸ்வரர், முக்தேஸ்வரர் கோவில், வைகுண்ட பெருமாள் கோவில் 1 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் கட்டிடம் கட்ட உயர வரம்பு 9 மீட்டராகும்.

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் கோவிலை சுற்றி விதி மீறல் கட்டிடங்கள் தொடர்பான வழக்கில் நடவடிக்கை எடுக்காமல் இருந்த திருச்சி மாநகராட்சி ஆணையரை மாண்புமிகு உயர்நீதி மன்றம் நேரடியாக கடுமையாக கண்டித்தை மட்டுமில்லாமல் சம்மந்தப்பட்ட அனைத்து அரசு அதிகாரிகள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இவ்வுத்திரவு காஞ்சிபுரம் மாநகராட்சிக்கும் பொருந்தும்.

ஏற்கனவே காஞ்சிபுரத்தில் விதி மீறி கட்டப்பட்ட ஸ்ரீராம் ரெசிடென்ஸி கட்டிடத்தின் மீது இம்முறை மன்றத்தில் புகார் அளித்து அதன் தொடர்பாக எனக்கு கொலை மிரட்டல் விடுத்தது குறித்து மனித உரிமையியல் ஆணையத்திடம் புகார் அளித்து 10941/22/36/2025 என எண்ணிட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

எனவே, EMM + ESS மருத்துவமனை விதி மீறி கட்டிடம் கட்டப்பட்டதற்கு உடந்தையாக இருந்த காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் மீது சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்கவும், மேலும் மேற்கண்ட கட்டிடத்தின் மீது சென்னை உயர்நீதி மன்றத்தின் வழிகாட்டுதலை பின்பற்றி நடவடிக்கை எடுக்க இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

7. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் காஞ்சிபுரம் மாநகராட்சி உதவிப் பொறியாளர்கள் (திட்டம்) 24.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.12, நகரளவு எண்.852, 853 பழைய கதவு எண்.33சி, 33சி1 மதங்கீஸ்வரர் கோவில் தெருவில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் நாள் 30.06.2022ல், ஸ்டில்ட் முதல் மற்றும் இரண்டாம் தளம் மருத்துவ மனை கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது கட்டிட உரிமையாளர் EMM + ESS மருத்துவமனை அனுமதிக்கு மாறுதலாக, ஸ்டில்ட் தளத்தை மருத்துவமனையாகவும் கூடுதலாக மூன்றாம் தளமும் மருத்துவமனை கட்டிடமாக கட்டியுள்ளார்.

எனவே, கட்டிட உரிமையாளர் EMM + ESS மருத்துவமனை கட்டிடத்திற்கு மாறுதலாகவும் / கூடுதலாகவும் கட்டிடம் கட்டியிருப்பதால், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135/1–ன் கீழ் 12.06.2025 நாளிட்டு அறிவிப்பும் 04.02.2026 நாளிட்ட இறுதி அறிவிப்பும் வழங்கப்பட்டது. ஆனால் அறிவிப்பின்படி மேற்கண்ட மருத்துவமனை நடவடிக்கை எடுக்காததால் 25.02.2026 அன்று மருத்துவமனை மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.''.

8. இரண்டாம் எதிர்மனுதாரர் EMM + ESS மருத்துவமனை சார்பாக அதன்ஆலோசகர் திரு. J. மூர்த்தி என்பவர் 24.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''காஞ்சிபுரம் மாநகராட்சியில் EMM & ESS மருத்துவமனை 70 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகிறது. முதலில் தரைதளத்தில் மட்டும் இயங்கி வந்த நிலையில் மருத்துவமனை மேம்படுத்த G+2 கட்டிடம் 8.9 மீட்டர் உயரம் கட்ட காஞ்சிபுரம் மாநகராட்சியில் அனுமதி பெறப்பட்டது. தரைதளத்தில் வரவேற்பாளர் அறை மற்றும் பரிசோதனை அறை ஆகியவை இயங்கி வருகிறது.

மருத்துவமனை மேம்படுத்தப்பட்டதால் மருத்துவமனையின் முகப்பு பார்ப்பதற்கு சற்று உயரமாக தெரிகிறது. ஆனால் கட்டிடத்தின் மற்ற மூன்று பக்கங்களும் 8.9 மீட்டர் உயரத்திற்கு கட்டப்பட்டுள்ளது. பக்கவாட்டில் தற்காலிகமாக கூரை வேயப்பட்டுள்ளது. முன்பக்கம் லிப்ட் மற்றும் படி, கூண்டு உயரம் கூடுதல் குறித்து மாநகராட்சியால் அறிவிப்பு அளிக்கப்பட்டது. அதற்காக மேல் முறையீடு செய்யப்பட்டு அது நிராகரிக்கப்பட்டது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மனுதாரர் எங்கள் மருத்துவமனை நிர்வாகத்தினை பணம் கேட்டு மிரட்டி வருகிறார் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.''

9. மனுதாரரின் முறையீட்டு மனு, எழுத்துபூர்வமான வாக்குமூலம், நேரடியாக அளித்த வாக்குமூலம், முதலாம் எதிர்மனுதாரரான காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள், உதவிப் பொறியாளர்களின் (திட்டம்) வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் சார்பாக ஆஜரான அதன் ஆலோசகரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.12, நகரளவு எண்.852, 853 பழைய கதவு எண்.33C, 33C1 மதங்கீஸ்வரர் கோவில் தெருவில் கட்டிட அனுமதியை மீறியும் மற்றும் The Ancient Monuments and Archaeological Sites and Remains Act, 1958இல் குறிப்பிட்டுள்ள உயர கட்டுப்பாட்டு விதிகளை மீறியும் கூடுதலாக கட்டப்பட்டுள்ள EMMESS மருத்துவமனை கட்டடம் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தின் வழிகாட்டுதலை பின்பற்றி உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மற்றும் மேற்கண்ட விதிமீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காத காஞ்சிபுரம் மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட அலுவலர் மீது சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்குமாறும் மனுதாரர் கோரியுள்ளது மனுதாரரின் மனு, எழுத்துபூர்வ வாக்குமூலம் மற்றும் நேரடியான வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.12, நகரளவு எண்.852, 853 பழைய கதவு எண்.33C, 33C1 மதங்கீஸ்வரர் கோவில் தெருவில் கட்டப்பட்டுள்ள EMMESS மருத்துவமனை கட்டிடத்திற்கு, ஸ்டில்ட் முதல் மற்றும் இரண்டாம் தளம் கட்ட வழங்கப்பட்ட கட்டிட அனுமதிக்கு மாறாக ஸ்டில்ட் தளத்தை மருத்துவமனையாகவும் கூடுதலாக மூன்றாம் தளமும் மருத்துவமனை கட்டிடமாக கட்டியுள்ளதால், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135(1)–ன் கீழ் அறிவிப்புகள் வழங்கப்பட்டும் அதன்படி மேற்கண்ட மருத்துவமனை உரிய நடவடிக்கை எடுக்காததால், அம்மருத்துவமனை கட்டிட உரிமையாளர் மீது காஞ்சிபுரம் மாநகராட்சியால் குற்றபத்திரிக்கை எண் P.R.No.3/Zone1/2026, நாள் 25.02.2026–ன்படி காஞ்சிபுரம் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ல் பிரிவு 135(1) (2) (6) r/w 180–ன்கீழ் குற்றச்சாட்டு பதிவு செய்து

குற்றவியல் நடவடிக்கை மேற்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும் முதலாம் எதிர்மனுதாரரான காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் (திட்டம்)—ன் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

காஞ்சிபுரம் மாநகராட்சியில் EMMESS மருத்துவமனை 70 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகிறது என்பதும், முதலில் தரைதளத்தில் மட்டும் இயங்கி வந்த நிலையில் மருத்துவமனை மேம்படுத்த G+2 கட்டிடம் 8.9 மீட்டர் உயரம் கட்ட காஞ்சிபுரம் மாநகராட்சியில் அனுமதி பெறப்பட்டு, தரைதளத்தில் வரவேற்பாளர் அறை மற்றும் பரிசோதனை அறை ஆகியவை இயங்கி வருகிறது என்பதும், மருத்துவமனை மேம்படுத்தப்பட்டதால் மருத்துவமனையின் முகப்பு பார்ப்பதற்கு சற்று உயரமாக தெரிகிறது என்பதும், கட்டிடத்தின் மற்ற மூன்று பக்கங்களும் 8.9 மீட்டர் உயரத்திற்கு கட்டப்பட்டு, பக்கவாட்டில் தற்காலிகமாக கூரை வேயப்பட்டுள்ளது என்பதும், முன்பக்கம் லிப்ட் மற்றும் படி, கூண்டு உயரம் கூடுதல் குறித்து மாநகராட்சியால் அறிவிப்பு அளிக்கப்பட்டதற்காக மேல் முறையீடு செய்யப்பட்டு அது நிராகரிக்கப்பட்டது என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரரான சார்பில் EMMESS மருத்துவமனை சார்பாக ஆஜரான அதன் ஆலோசகரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண்.4, பிளாக் எண்.12, நகரளவு எண்.852, 853 பழைய கதவு எண்.33C, 33C1 மதங்கீஸ்வரர் கோவில் தெருவில் கட்டப்பட்டுள்ள EMMESS மருத்துவமனை கட்டிடத்திற்கு, ஸ்டில்ட் முதல் மற்றும் இரண்டாம் தளம் கட்ட வழங்கப்பட்ட கட்டிட அனுமதிக்கு மாறாக ஸ்டில்ட் தளத்தை மருத்துவமனையாகவும் கூடுதலாக மூன்றாம் தளமும் கட்டியுள்ளதற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135(1)—ன் கீழ் அறிவிப்புகள் வழங்கப்பட்டும் அதன்படி மேற்கண்ட மருத்துவமனை உரிய நடவடிக்கை எடுக்காததால், அம்மருத்துவமனை மீது காஞ்சிபுரம் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998—ல் பிரிவு 135(1) (2) (6) r/w 180—ன்கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளர்களின் (திட்டம்) வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் சூழ்நிலையில், வழக்குகள் நிலுவையில் உள்ள இனங்கள் குறித்து, 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)—ல் நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:—

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014, Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx
(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;
(c) xxx xxx

எனவே, மனுதாரர் புகார் தொடர்பான பொருட்பாடு குறித்து காஞ்சிபுரம் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, தொடர் நடவடிக்கை நிலுவையில் உள்ளதால், மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி மனுதாரரின் மனு மீது

இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மே திங்கள் 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. S. அன்பழகன்,
155, அசோக்நகர், முசிறி மெயின் ரோடு,
துறையூர் (அஞ்சல் (ம) வட்டம்),
திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621 010.

(2) ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி, காஞ்சிபுரம்.

(3) நிர்வாக இயக்குநர்,
EMMESS Women Care Center,
33-C ஹாஸ்பிட்டில் ரோடு,
காஞ்சிபுரம்–631 502.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

11/5/26
செயலாளர்.